# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை—600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண் 16/2019 நாள் 11.12.2019

### தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

சாதாரண உள்ளாட்சித் தேர்தல்—2019

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவது குறித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் மாநில மற்றும் மாவட்ட அரசிதழ்களில் 09.12.2019 நாளிட்ட அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன. மேற்படி தேர்தலில் வார்டு மறுவரையறை, வார்டு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு ஆகியவற்றை பொறுத்தவரை 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்பமை உச்ச நீதிமன்றம் 11.12.2019 அன்று வழங்கிய தீர்ப்பில், நடைபெறவுள்ள தேர்தல்கள் அனைத்தும் 2011—ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியே மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆணையிட்டுள்ளது. கிராம ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ள வார்டுகளின் மறுவரையறை மற்றும் மேற்படி வார்டு உறுப்பினர், இதர பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு குறித்த அரசின் அறிவிக்கைகள் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. எனவே, உச்சநீதிமன்ற ஆணையின்படி ஏற்கெனவே 09.12.2019 நாளிட்ட அறிவிக்கைகளிலுள்ள தேர்தல் அட்டவணையின்படியே, எவ்வித மாற்றமுமின்றி தேர்தல் நடைமுறைகள் கடைபிடிக்கப்பட்டு நிறைவடையும்.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

11/12/19

மக்கள் தொடர்பு அலுவலர்